# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au




பேச்சுப் போட்டி 2024

## ஆண்டு 5

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் அன்பான வணக்கம் .......

# இராவணன்

இராவணன் தன்னம்பிக்கையின் குறியீடு
இராவணன் தன்மானத்தின் வெளிப்பாடு

இமயமலையை இழுத்து சுமக்கும் ஆற்றல் பெற்ற இராவணன்
தொடையில் இருந்து நரம்பை எடுத்து வீணை மீட்டிய இராவணன்
சாமகானம் பாடிப் பாடி சிவனை அசைத்த இராவணன்

எந்தவொரு இதிகாசத்திலும் இராவணனைப் போன்ற எதிர்நிலைப் பாத்திரம் இன்று வரை எதிலும் இல்லை.
இலங்கேஸ்வரன் இராவணன் இராட்சியத்தின் சிறப்புத் தெரியுமா உங்களுக்கு?
கோட்டை மதில்களைத் தாண்டுவதற்கு வெளிச்சம் காற்று ஏன்? காலன் கூட நடுங்குவான் என்று சொன்னது எதிராளி அனுமன்.
தங்கையின் தன்மானத்திற்காக நீதி கேட்கக் கடவுளேயானாலும் எதிர்த்து நின்றவர்

சீதையைக் காத்த சீருடையோன்
பெண்மையைப் போற்றும் பேராண்மை இவன்
கலைகளே விஞ்சும் வீரக் கலைஞன் இவன்
சிவ பக்தியில் எவனையும் மிஞ்சும் நல்லவன்
படைசக்தியில் எமனையும் விஞ்சும் வல்லவன்
கலை பத்தில் தலை சிறந்தவன்



கன்னியா சுடுநீர்க் கிணறு



இராவணன் வெட்டு

திசையெட்டும் புகழ் கொண்டவன்
தமிழ்ப் பெருந்தலைவன்
ஈழத்தமிழர் எம்பெரும் முப்பாட்டன் இராவணன்
எனக் கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி
வணக்கம்



இலங்கையின் இராவணேஸ்வரன்

ஆக்கம்:
ஆசிரியர் திருமதி. பலோமியற் அன்ரனிஸ்ராலின்.